**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - 2013**

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று மற்றும் காசோட்டக் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்க தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1992 இன் 49 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1981 இன் 73 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 16(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் இலங்கை அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையிற் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு

உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கொல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு (எஸ்எல்பிஎஸ்எஸ்) இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 182,855,614 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடமுள்ள காணியின் பெறுமதி பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் தலைவர் அவருடைய பதிலில் அதிகாரசபை ஸ்தாபித்த காலத்தில் நெடுஞ்சாலைகள் திணைக்களத்தால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருந்த காணி தரிசு நிலமாக இருந்ததுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு காணியின் சட்டரீதியான உரிமை உரித்துடையாக்கப்பட்டிருக்கவில்லை. காணியின் பெறுமதி கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் மீது 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தால் இலவச மானியமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு காணியை ஒதுக்குவதற்கு அனுமதித்திருந்தது என குறிப்பிட்டிருந்தார்.

(ஆ) நிலையான சொத்துக்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 31,295,832 ஆன விற்பனைப் பெறுகைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஏனைய வருமானமாக காட்டப்பட்டிருந்த போதிலும் அத்தகைய சொத்துக்களின் கிரயம் அதிகாரசபையால் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 இல் இல 2176 உரித்து உறுதியின் கீழ் மாற்றப்பட்டிருந்த ரூபா 5,873,788 பெறுமதியிடப்பட்ட 0.6399 ஹெக்டேயர் பரப்பளவுள்ள வாதுலவத்தை காணி நிதிக்கூற்றுக்களில ரூபா 373,786 ஆக காட்டப்பட்டிருந்தது. இதற்கிணங்க, காணியின் பெறுமதி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,500,002 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) கொழும்பு கட்டுநாயக்க அதிவேக பாதை செயற்திட்டத்திற்கு சொந்தமான ரூபா 69,977,580 பெறுமதியான நிலையான சொத்துக்கள் 2013 திசெம்பர் 31 அளவில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் அத்தகைய சொத்துக்களின் பெறுமதி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 68,945,445 தொகையான 214 விடயங்கள் தொடர்பான நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் பெறுமதி பெறமுடியாதிருந்த 239 விடயங்கள் தொடர்பிலான இரண்டு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட வீதி புனரமைப்பு மற்றும் முன்னேற்றங்களின் செயற்திட்டங்களால் கொள்வனவு செய்யப்பட்டு பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட நிலையான சொத்துக்கள் என்பவற்றின் பெறுமதி மீளாய்வாண்டிற்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் பெறுமதியிடப்பட்டு உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.

(ஊ) டாபரே மாவத்தையில் இருந்த 0.62018 ஹெக்டயர் பரப்பளவிலுள்ள மகுல்தெனிய காணி வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்து உறுதி இல 1413 இன் கீழ் ரூபா 45 மில்லியன் பெறுமதியில் 1998 யூலை 01 இல் மாற்றப்பட்டிருந்தது. ஆகையால் இந்தக் காணி 34 துண்டுகள் மற்றும் 13 துண்டுகளாக பிரித்து 13 தரப்பினருக்கு மாதாந்த கொடுப்பனவு அடிப்படையில் கொடுக்கப்பட்டிருந்தது. எனினும் காணியின் பெறுமதி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மஹநெகும கம்பனியிடமிருந்து பெறவேண்டிய இரண்டு கணக்கு மீதிகள் தொடர்பிலான ரூபா 8,077,693 தொகை மஹநெகும கம்பனியின் பிடித்துவைத்தல் பொறுப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆகையால் நிதிக்கூற்றுக்களின் நடைமுறை பொறுப்புக்களில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 3,180,163,323 மொத்த பிடித்துவைத்தல் காசு மேற்குறிப்பிடப்பட்ட வருமதி மீதிகளை தீர்ப்பனவு செய்த பின் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) ரூபா 702,340,332 தொகையான மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு அதிகாரசபையின் காசப்பாய்ச்சல்கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசல்லாத சீராக்கமாக சீராக்கப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது. எனினும் இந்த தொகையானது மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் நிதிச்செயலாற்றல் கூற்றில் பதிவழிக்கப்பட்ட ரூபா 807,020,009 பணிக்கொடை செலவுகளுடன் சமப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட உள்ளபடியான பணிக்கொடை கொடுப்பனவும் காசப்பாய்ச்சல்கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஐ) ஒரு வருடத்திற்கு மேலாக மாத்திரமுள்ள குறை பொறுப்புக் காலத்துடன் தொடர்புள்ள நிர்மாண வேலைக்கான நிறுத்திவைத்தல் காசு மாத்திரம் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாப் பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும ரூபா 5,457,277,045 மொத்த பிடிகாசு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) அதிகாரசபையின் ஒட்டுமொத்த பதவியணி தொடர்பான ரூபா 1,742,994,462 தொடர்பான மொத்த ஓய்வூதிய நலன்புரி கடப்பாடுகள 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான் நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. எனினும் ஒட்டுமொத்த பதவியணியின் மொத்த ஓய்வூதிய நலன்புரி ஒரு வருடத்திற்குள் செலுத்தப்பட வேண்டியதாக இருக்கவில்லை.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன் மீதிகளிற்கும் உரிய வங்கியால் உறுதிப்படுத்தப்பட்ட மீதிகளிற்கும் இடையில் ரூபா 4,021,182,592 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டன. மேலும், வித்தியாசங்களிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கடனளிக்கும் முகவர் | நிதிக்கூற்றுக்களின் படி தொகை | வங்கி உறுதிப்படுத்தலின் படி தொகை | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| தேசிய சேமிப்பு வங்கி | 5,338,068,661 | 6,447,202,263 | 1,109,133,602 |
| இலங்கை வங்கி | 13,341,101,109 | 11,087,204,025 | 2,253,897,084 |
| இலங்கை வங்கியின் அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம் | 932,970,602 | 274,818,696 | 658,151,906 |

(ஆ) 06 உப அலுவலகங்களின் வங்கிகணக்கிணக்க கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் உரிய வங்கியால் உறுதிப்படுத்தப்பட்ட மீதிகளிற்கும் இடையில் ரூபா 515,350 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டன.

## 2.2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தொழிலாரம்பிப்பு மற்றும் ஏனைய முற்பணங்கள்

(i) 2004 முதல் 2007 வரையான ஆண்டுகளின் போது 51 ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 389,680,387 தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ii) அதிகாரசபையானது மீளாய்வாண்டு இறுதிவரையும் 05 ஆண்டினைவிட பழமைவாய்ந்த ரூபா 74,632,936 தொகையான செலுத்த வேண்டிய முற்பணக் கணக்குகளில் உள்ளடங்கியிருந்த ரூபா 7,695,731 தொகையான தீர்ப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 09 ஒப்பந்தகாரர்கள் தொடர்பில் ரூபா 38,347,714 தொகையான கடன் மீதிகள் ‘‘முற்பணக் கணக்காக’’ காட்டப்பட்டிருந்ததுடன் அவை ஒப்பந்தகாரர்களிடமிருந்தான மேலதீக அறவீடுகளாக இருந்ததென அவதானிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த தொகையை தீர்ப்பதற்கு 2013 திசெம்பர் வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நோக்கங்கள் பூர்த்தியான பின்னர் பெறப்பட்ட முற்பணங்கள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டின் போது 11 ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 59,782,618 தொகையான முற்பணக் கணக்குகள் 2013 திசெம்பர் 31 வரையிலும் ஒப்பந்தகாரரால் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(v) மஹா நெகும வீதி நிர்மாண கம்பனியிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 42,181,483 தொகையான 05 ஆண்டினைவிட பழமைவாய்ந்த முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vi) ஒப்பந்தம் பூர்த்தியாவதற்கு முன்னர் ஒப்பந்தங்களிற்காக கொடுக்கப்பட்ட முற்பணங்கள் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2011, 2012 மற்றும் முன்னைய 5 ஆண்டுகளின் வழங்கப்பட்ட ரூபா 24,309,117 தொகையான முற்பணங்கள் 2013 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாடகை வருமானம் மற்றும் பெறவேண்டிய வாடகை

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான பொரளை உப- பாதையிலுள்ள 04 வியாபார கடைகளிலிருந்து 01 தொடக்கம் 06 வருட வீச்சிலான காலமாக பெறவேண்டிய வாடகை வருமானம் ரூபா 1,877,835 தொகையாகவிருந்ததுடன் 2014 யூன் 30 வரையும் அத்தகைய சிறிய கடை வியாபாரிகளிடமிருந்து வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக இல 04 சிறிய கடை வியாபாரி 2013 ஆம் ஆண்டிற்கான ரூபா 129,994 தொகையான சிறிய கடை வாடகையை செலுத்தியிருக்காததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கண்டி உப – பாதையிலுள்ள 17 வியாபார சிறிய கடைகளிலிருந்து பெறவேண்டிய ரூபா 1,969,109 தொகையான வாடகை

வருமானமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், 2014 யூன் 30 இலும் அத்தகைய வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் சபையின் தலைவர் தன்னுடைய பதிலில் “ கடைகளின் உரிமையாளர்களிற்கு எதிராக அவர்களிடமிருந்து பெறவேண்டிய வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது” என குறிப்பிட்டார்.

(இ) செலுத்தவேண்டிய மற்றும் நிறுத்திவைக்கப்பட்ட வைப்புக்கள்

(i) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தவேண்டிய மற்றும் நிறுத்திவைக்கப்பட்ட வைப்புக்கள் ரூபா 6,834,606,448 ஆக இருந்ததுடன் இந்த மீதிகள் செலுத்தவேண்டிய தாமதக்கட்டணங்கள், மீளளித்தல் வைப்புக்கள், செயலாற்றல் பாதுகாப்பு வைப்புக்கள், செலுத்தவேண்டிய வாடகை வைப்புக்கள் மற்றும் ஏனையவற்றை உள்ளடக்கியிருந்தது. எனினும், அதிகாரசபை நீண்டகாலமாக இத்தகைய வைப்புக்களை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ii) 567 ஒப்பந்தங்கள் தொடர்பான ரூபா 493,529,142 தொகையான பிடிகாசு 3 தொடக்கம் 8 ஆண்டுகள் வரையான காலத்திற்கு இடையில் தீர்க்கப்படாது நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(iii) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20,202,123 தொகையான பின்வரும் வைப்புக்கள் தீர்க்கப்படாதிருந்ததுடன் இவை பொது வைப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய வைப்புக்களை மேலதிக தாமதமில்லாமல் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | காலம் | தொகை<br>ரூபா. |
|---|---|---|
| சேவை வைப்புக்கள் | 2001,2006,2011,2012 | 5,886,430 |
| வாடகை வைப்புக்கள் | 2008,2009,2010 | 13,935,693 |
| வைப்புக்கள்- ஏனைய பிராந்தியம் | 2010 | 300,000 |
| 8 ஒப்பந்தக்காரர்களின் வைப்புக்கள் (வீதி பராமரிப்பு மற்றும் நிர்மாணம்) | 1986 | 80,000 |
| மொத்தம் | | 20,202,123 |

(ஈ) வியாபார செலுத்தவேண்டியவை

வியாபார கடன்கொடுத்தோரில் உள்ளடங்கியிருந்த ரூபா 356,139,840 தொகையானது 43 சந்தர்ப்பங்களில் மூலப்பொருள் கொள்வனவு மற்றும்

நிர்மாண வேலைக்கான ஒப்பந்தக்காரர்களுக்காக செலுத்தவேண்டியவையாகவிருந்ததுடன் ஒரு வருடத்திற்கு மேலதிகமாக தீர்க்கப்படாதிருந்தது. அதில் ரூபா 5,441,051 தொகையான 05 கணக்கு மீதிகள் 5 ஆண்டுகளிற்கு மேலாகவிருந்தது.

2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

-----------------------------------------------------------

வங்கி மீதிகள், இடைவழியிலுள்ள பணம் , வங்கி கடன்கள், மற்றும் விளம்பர செலவினங்கள் என்பவற்றை உள்ளடக்கிய ரூபா 17,530,089,407 கூட்டுமொத்ததொகையானது நேரடிஉறுதிப்பாடுகள், பட்டியல்கள், மற்றும் கொள்வனவு விடயங்களைஉள்ளடக்குகின்ற பதிவேடுகள் போன்ற சான்றுகள் கிடைக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

**2.3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

-------------------------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்டபின்வரும் இணங்காமைகள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றிக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 8(i) ஆம் பிரிவு | 2012 செப்டம்பர் 30 க்கு முன்னர் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டிய வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 2013 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவுத் திட்டம் 2012 நவெம்பர் 12 ஆந் திகதியன்றே அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான சீரமைக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டம் 2013 திசெம்பர் 06 இலேயே அங்கீகரிக்கப்பட்டிருந்தது |
| (ஆ) நிதிப்பிரமாணங்கள் | |
| (ii) நிதிப்பிரமாணம் 396 | 06 வங்கிக் கணக்குகள் தொடர்பில் ரூபா 28,670 தொகையான 12 காலாவதியான காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii)நிதிப்பிரமாணம் 373 மற்றும் 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 332 ஆம் இலக்க அலுவலக சுற்றறிக்கை | அதிகாரசபையின் 03 உப அலுவலகங்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 48,845 மற்றும் ரூபா 438,980 தொகையான முறையே சிறுசெலவு கட்டுநிதி மற்றும் எரிபொருள் கட்டுநிதிகள் நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடுகள் மற்றும் சுற்றறிக்கைகளிற்கிணங்க மீளாய்வாண்டு இறுதிவரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2007 டிசெம்பர் 18 ஆந் திகதிய பீஈடீ/47 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முதலேயே 2013 -2017 ஆம் ஆண்டிற்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கூட்டிணைந்த திட்டமானது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருந்த போதும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை சொல்லப்பட்ட திட்டத்தை உரிய நேரத்தில் சமர்த்திருக்கவில்லை. பணிப்பாளர் சபையால் அந்த திட்டம் 2014 ஏப்ரல் 23 இலேயே அங்கீகரிக்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 547.17 மில்லியனான நேரொத்த வரிக்கு முந்திய தேறிய பற்றாக்குறைக்கு எதிராக ரூபா 547.43 மில்லியன் வரிக்கு முந்திய தேறிய மிகையில் விளைவித்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 1,094.6 மில்லியன் அதிகரிப்பைக் காட்டுகின்றது.

வாக்களிக்கப்பட்ட நிதியம் மற்றும் ஏனைய வருமானம் போன்றவற்றின் மிகை ரூபா 6,181 மில்லியனால் அதிகரிப்பு மற்றும் அபிவிருத்தி மற்றும் பராமரிப்புச் செலவு, ஆளுக்குரிய வேதனம், பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு போன்றன முறையே ரூபா 2,647 மில்லியன் , ரூபா 1,909 மில்லியன் மற்றும் ரூபா 545 மில்லியனால் குறைவடைந்தமையே மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளின் அதிகரிப்புக்கு காரணமாக அமைந்தன._

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்றில் காட்டப்பட்ட சில குறிப்பிடத்தக்க மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|
| | **2013** | **2012** |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | (1,681) | (3,170) |
| தேறிய சொத்துக்கள் | 124,552 | 69,355 |
| திரண்ட பற்றாக்குறை | (8,012) | (8,205) |

2013 ஆம் ஆண்டில் தெற்கு அதிவேகப் பாதையின் கிரயம் ரூபா 54,655 மில்லியனளவால் மூலதனமாக்கியதால் அதிகாரசபையின் தேறிய சொத்துக்கள் அதிகரித்துள்ளன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

### 4.1.1 அதிகாரசபையின் பராமரிப்பு வேலைகள் - தேசிய வீதிகள் மற்றும் பாலங்கள்

மீளாய்வாண்டிற்கான தேசிய வீதிகள் மற்றும் பாலங்களின் பராமரிப்பு மீதான நிதி ஒதுக்கீடும் உள்ளவாறான
செலவினமும் பின்வருமாறு.

| | மூல நிதி ஒதுக்கிடு | மீளாய்வு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு | உள்ளவாறான செலவினம் | மூல நிதி ஒதுக்கீட்டின் சதவீதமாக பயன்பாடு |
|---|---|---|---|---|
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | |
| பொதுப் பராமரிப்பு | 1,835 | 2,360.4 | 2,476.4 | 134 |
| தொடர்ச்சியானபராமரிப்பு | 1,000 | 1,593.0 | 1,691.9 | 169 |
| காலரீதியான பராமரிப்பு | 1,905 | 949.1 | 1,046.4 | 55 |
| வடிவகாலமைப்பு முறைமை பராமரிப்பு | 760 | 221.9 | 284.6 | 37 |
| சமிக்ஞை விளக்குப் பராமரிப்பு | 780 | 459.0 | 490.8 | 63 |
| அவசர மற்றும் இயற்கை அனர்த்தங்களின் போதான பராமரிப்பு | 600 | 1,909.1 | 1,152.6 | 192 |
| பேரியின் செயற்பாடும் பராமரிப்பு | 20 | 7.1 | 7.2 | 36 |
| **மொத்தம்** | **6,900** | **7,499.6** | **7,149.9** | **-** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமில்லாத வீதிகளின் பராமரிப்பு**

2013 ஆம் ஆண்டிற்கான பாதிடப்பட்ட மதிப்பீடுகள் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமில்லாத ஏ மற்றும் பீ வகை வீதிகளின் பராமரிப்புக்காக ரூபா 7,500 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. பராமரிப்பு , முகாமைத்துவம் மற்றும் நிர்மாணப்பிரிவின் பணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது இந்த நோக்கத்திற்காக ரூபா 493.86 மில்லியன் தொகையை செலவழித்திருந்ததுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமில்லாத 09 மாகாணங்களிலுள்ள 212 மாகாண வீதிகளின் பராமரிப்பிற்காக 2013 ஆம் ஆண்டில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் ரூபா 990.17 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமில்லாத ஏனைய வீதிகளிற்காக ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ஏ மற்றும்

ப வகை வீதிகளின் பராமரிப்பு மீதான எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றலை அடைய முடியாதிருந்தது.

தலைவர் தனது பதிலில் ''வீதி அபிவிருத்தி அதிகாரசபை வீதி செயற்திட்டங்களின் திறப்புவிழா , இணையும் வீதிகளையும் முன்னேற்ற வேண்டியிருந்தமை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டங்களிற்கான மூலப்பொருட்களின் போக்குவரத்து காரணமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையல்லாத வீதிகள் சேதமடைந்தமை போன்ற தேசிய அக்கறையை கவனத்திற்கொண்ட வேலைகளின் அவசரம் காரணமாக வேலைகள் கையாளப்பட்டது'' என குறிப்பிட்டார்.

(ஆ) **வீதிகள் பராமரிப்பின் செயலாற்றல்**

---

2013 ஆம் ஆண்டிற்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின்செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி வீதிகளின் பராமரிப்பிற்காக ரூபா 6,701 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அத்தகைய ஏற்பாடுகளின் பயன்பாடு தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) 09 மாகாணங்களால் ஏற்படுத்தப்பட்ட செலவானது ரூபா 565,114,985 ஆன ஏற்பாட்டினை மிஞ்சியிருந்ததுடன் ஒரு மாகாணத்திலுள்ள ஏற்பாட்டினை விட குறைவாக ரூபா 23,854 தொகை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது வீதிகளின் பராமரிப்பு வேலைக்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமில்லாத வீதிகளின் பராமரிப்பு வேலை மீது ரூபா 493,861,485 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், வீதிகளின் பராமரிப்பு வேலைக்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு மிஞ்சியிருந்தது. இது தொடர்பில் தலைவர் அவருடைய பதிலில் குறிப்பிடுகையில் தேசிய அக்கறையை கருத்திற்கொண்டு வேலைகளின் அவசியத்தன்மையால் வீதி அபிவிருத்தி அதிகாரசபை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை என குறிப்பிட்டார்.

**(இ)** <u>காலரீதியான பராமரிப்பு வேலைகள் , கழிவகற்றல் முறைமையின் பராமரிப்பு , சமிக்ஞை விளக்குகளின பராமரிப்பு , அவசர மற்றும் இயற்கை அனர்த்தங்களின் கீழான பராமரிப்பு வேலைகள்.</u>

2013 ஆம் ஆண்டிற்கான காலரீதியான பராமரிப்பு வேலைகள் , கழிவகற்றல் முறைமையின் பராமரிப்பு , சமிக்ஞை விளக்குகளின பராமரிப்பு , அவசர மற்றும் இயற்கை அனர்த்தங்களின் கீழான பராமரிப்பு வேலைகளுக்காக வருடாந்த பாதீட்டில் ரூபா 3539.3 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது.

பராமரிப்பு முகாமைத்துவம் மற்றும் நிர்மாணப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட வருடாந்த பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம், மேலே குறிப்பிட்ட பராமரிப்பு வேலைகளின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது 09 மாகாண அலுவலகங்களுடன் தொடர்புடைய ரூபா 2408.62 மில்லியன்மதிப்பிடப்பட்ட கிரயத்துடனான மொத்த அறுநூற்று அறுபத்து எட்டு பராமரிப்பு வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சீரமைக்கப்பட்ட ஒதுக்கீடு | மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுப்படாத பராமரிப்பு வேலைகள் | | |
|---|---|---|---|---|
| | | மாகாண அலுவலகங்களின் எண்ணிக்கை | வேலைகளின் எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட கிரயம் |
| | ரூபா.மில்லியன்கள் | | | |
| காலரீதியான பராமரிப்பு | 949.16 | 9 | 238 | 1214.72 |
| வடிவகாலமைப்பு முறைமை | 221.91 | 9 | 285 | 666.4 |
| சமிக்ஞை விளக்குப் பராமரிப்பு | 459.08 | 4 | 32 | 67.6 |
| அவசர மற்றும் இயற்கை அனர்த்தங்களின் போதான வேலைகள் | 1909.15 | 6 | 113 | 459.9 |
| **மொத்தம்** | **3539.3** | **9** | **668** | **2408.62** |

(ii) 09 மாகாண அலுவலகங்களுடன் தொடர்புடைய 182 பராமரிப்பு வேலைகளுக்காக ரூபா 456.36 மில்லியன் மொத்தம் செலவழிக்கப்பட்டிருந்தபோதும் இந்த பராமரிப்பு வேலைகள் பராமரிப்பு முகாமைத்துவம் மற்றும் நிர்மாணப்பிரிவினால் தயாரிக்கப்பட்ட வருடாந்த பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பராமரிப்பு வேலைகளுக்கான பாதீட்டு ஏற்பாடு ரூபா 3539.3 மில்லியனவாகவிருந்த போதும் அதன்மீது ரூபா 4487.52 மில்லியன் உள்ளபடியான செலவு ஏற்பட்டிருந்த போதும் ஆகையால் மீளாய்வாண்டின் போது பராமரிப்பு வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு ரூபா 948.22
மில்லியனால் மிஞ்சியிருந்தது.

இது தொடர்பில் தலைவர் குறிப்பிடுகையில் காலரீதியான பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள வீதிகளில் சில உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட புனரமைப்பு செயற்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டதென குறிப்பிட்டார். ஆகையால் மூல நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து சில விடயங்கள் நீக்கப்பட்டதென குறிப்பிட்டார்.

### 4.2 ஒப்பந்த நிர்வாகம்

### 4.2.1. வீதிப் புனரமைப்பு மற்றும் முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) வீதி அகலமாக்கல் மற்றும் முன்னேற்றம்**

அரசாங்க நிதிகளின் கீழ் வீதிகளின் பாரமரிப்பு மற்றும் முன்னேற்றத்திற்கான ஒதுக்கீடுகள் மற்றும் செயலாற்றல் அறிக்கை, மாகாண பணிப்பாளர்களால்

அமுலாக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கை என்பவற்றின் பிரகாரம், பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கணக்காண்டில் ரூபா 2,577 மில்லியன் பெறுமதியான 22 வீதிகளின் வீதிகளின் அகலமாக்கல் மற்றும் முன்னேற்றங்கள் தொடங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு நிர்மாணங்கள் மற்றும் முன்னேற்றங்கள் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமில்லாத 183 வீதிகளின் அகலமாக்கல் மற்றும் முன்னேற்றத்திற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 5,049.06 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது..

(iii) ரூபா 13,395 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்துடன் ஒதுக்கப்பட்ட 103 வீதிகளின் அகலமாக்கல் மற்றும் முன்னேற்றம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 50 சதவீதத்தை விட குறைந்த முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது.

(iv) 25 வீதிகளின் அகலமாக்கல் மற்றும் முன்னேற்றத்திற்காக ரூபா 538 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

(v) 2013 ஆம் ஆண்டிற்கான வீதிகளின் அகலமாக்கல் மற்றும் முன்னேற்றம் தொடர்பிலான தகவல்கள் 06 அலுவலகங்களின் மாகாண பணிப்பாளர்களால் அனுப்பப்பட்டிருக்கவில்லை. இதற்கிணங்க, அந்த அலுவலகங்கள் தொடர்பிலான செயலாற்றல் பரீட்சிக்கமுடியவில்லை.

இது தொடர்பில் தலைவர் குறிப்பிடுகையில் தேசிய வீதிகளுடன் இணைப்பை முன்னேற்றுவதற்காகவும் வீதிகளின் தீங்கான நிலைமை காரணமாகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையல்லாத வீதிகளை எடுப்பதற்கு அதிக அவசியத்தன்மை காணப்படுவதாகவும் இந்த வீதி வேலைகள் பொது போக்குவரத்திற்கு வசதியளிப்பதற்கும் பொதுமக்களால் ஏற்படுத்துகின்ற போக்குவரத்து பிரச்சனைகளிலிருந்து விடுவிப்பதற்கும் மேற்கொள்ளப்பட்டிருந்தது என குறிப்பிட்டார்.

(ஆ) **பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீதிப் புனரமைப்பு மற்றும் முன்னேற்றங்கள்**

---

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வீதிப் புனரமைப்பு மற்றும் முன்னேற்றங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட முறையே ரூபா 1,020 மில்லியன் மற்றும் ரூபா 856.3 மில்லியனான ஏற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவு தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொருளாதார அபிவிருத்தி அமைச்சியிடமிருந்து வீதி நிர்மாண வேலைக்காக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில பெறப்பட்ட ஏற்பாடுகளை விஞ்சி ரூபா 1,858.5 மில்லியன் மற்றும் ரூபா 261 மில்லியனை செலவழித்திருந்தது. இதற்கிணங்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான வீதிகளின் அகலமாக்கல் , முன்னேற்றம் மற்றும் பராமரிப்பிற்காக

ஒதுக்கிடப்பட்ட நிதிகள் ஏனைய அமைச்சுக்களின் நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்டமையால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கியிருந்த நடவடிக்கைகளை அதிகாரசபையால் அடையமுடியவில்லை.

(ii) பொருளாதார அபிவிருத்தி அமைச்சியிடமிருந்து பெறப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீதி நிர்மாணத்தின் விபரங்கள் மற்றும் கிரயம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கியிருக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பொருளாதார அபிவிருத்தி அமைச்சுற்கு பதிலாக மேற்கொள்ளப்பட்ட வீதி நிர்மாணங்கள் தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேந்தலைச் செலவீனமானது ஏற்பாட்டினால் மேவுகை செய்யமுடியாதிருந்தது.

(இ) **உள்நாட்டு வங்கி நிதியளிக்கப்பட்ட வீதிப்புனரமைப்புச் செயற்திட்டம் (எல்பீஎவ்பி)**

---

வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது நாடுபூராவும் 1020.86 கிலோ மீற்றர் நீளமான 62 முன்னுரிமை வீதிகளை புனரமைப்பதற்கு உள்நாட்டு வங்கிகளிடமிருந்து ஐ.அமெ.டொலர் 500 மில்லியனுக்குச் சமனான கடன்களை பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. இதன்படி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது 50 வீதிகளை புனரமைப்பதற்கு 21 ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 131,585 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தங்களை வழங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள்மேற்கொள்ளப்பட்டன.

(i) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களின் (என்பிஎவ்பீ) கீழ் வீதி நிர்மாணத்திற்கான ஒப்பந்தகாரர்கள் கொள்வனவு வழிகாட்டலிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. பதிலாக உரிய வீதிகளிற்கான ஒப்பந்த பிரேரணைகளை ஒப்பந்தகாரர்கள் தாமே கொண்டு வந்திருந்தனர்.

(ii) ஒப்பந்தகாரரின் பிரேரணைகளை தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு (ரீஈசீ) முறைப்படி மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், வேலை விடயங்கள், அளவைகள், மதிப்பாய்வை ஆதாரப்படுத்தும் வீதங்கள் உள்ளடங்கலாக ஒவ்வொரு வீதிக்குமாக பொறியியலாருடைய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, நெடுஞ்சலை நியம வீதத்தை (எல்எஸ்ஆர்) பயன்படுத்தி தொழில்நுட்ப குழுவால் ஒப்பந்தகாரருடைய பிரேரணைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அளவீட்டு பட்டியலில் (பிஓகியு) ஒப்பந்தகாரரால் பிரேரிக்கப்பட்ட வீதங்கள் பொறியியலாருடைய வீதங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் உயர்வாக இருந்ததுடன் ஒப்பந்தகாரர்களிற்கு ஒப்பந்தகாரர்களின் வீதங்கள் முரண்பட்டிருந்தது.

(iii) நியம அமைச்சரவை நியமிக்கப்பட்ட கொள்வனவு குழு (எஸ்சீஏபிசீ) ஒவ்வொரு ஒப்பந்தத்திற்காகவும் இறுதி ஒப்பந்த தொகையை தீர்மானித்து சிபார்சு செய்திருந்தது. இதன்படி, 54 ஒப்பந்தங்களிற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவால் சிபார்சு செய்யப்பட்ட ரூபா 146,552.78 மில்லியன் தொகை நியம அமைச்சரவை நியமித்த கொள்வனவு குழுவால் ரூபா

155,794.94 மில்லியனிற்கு அதிகரிக்கப்பட்டிருந்தது. அத்தகையவாறு ரூபா 9,242.16 மில்லியன் மேலதிக கிரயம் எல்சீஏபிசி ஆல் வீதி நிர்மாணத்திற்காக சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

(iv) அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம், எல்பீஎவ்பி இன் கீழான சகல நிர்மாணங்களும் உள்ளூர் ஒப்பபந்தகாரர்களின் இயலளவை அதிகரிக்கும் நோக்கில் உள்ளூர் ஒப்பந்தகாரர்கள் ஊடாக செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், சில ஒப்பந்தகாரர்கள் ஏனையவர்களை விட அதிகளவு ஒப்பந்தங்களை வழங்கியிருந்தமையால் அதிகாரசபையால் இந்த நோக்கம் திருப்திகரமாக அடையப்பட முடியாதிருந்தது.

(iv) 2012 இன் முற்பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் மேலதிகமாக அஸ்பற் இடப்பட்டிருந்த சில வீதிப் பகுதிகள் எல்வீஎவ்பி இன் கீழ் புனரமைப்பதற்காக திரும்பவும் சேர்க்கப்பட்டிருந்தது கணக்காய்வு தெரிவுச்செவ்வையில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**4.2.2 திருகோணமலை மாவட்டத்தில் உருக்குப் பாலங்களின் நிர்மாணம்**

ஐக்கிய இராச்சியத்தின் உருக்கு பாலங்கள் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 3,831,936,290 தொகை செலவழித்து திருகோணமலை மாவட்டத்தில் ஐந்து உருக்கு பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டது. அதில் லங்கா பத்துமா மாலம் மற்றும் பலதோப்பூர் - சேருவில பாலம் நிர்மாணிப்பதற்காக ரூபா 336,328,087 ஆக தொகையும் மட்டக்களப்பு – திருக்கோவில் ஆறு- திருகோணமலை (ஏ-15) மற்றும் நகரத்திற்கு அப்பால் தொடர்புபட்ட அம்பேபுஸ்ஸ – குருநாகல்- திருகோணமலை (ஏ-16) என்பவற்றிலுள்ள 08 பாலங்களிற்காக ரூபா 3,495,608,203 ஆன தொகையும் ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள்மேற்கொள்ளப்பட்டன.

(i) 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ரூபா 3,495.6 மில்லியன் ஏற்பட்டு திருகோணமலையில் உட்சுற்று வட்ட வீதியில் எட்டு பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பாலங்கள் தொடர்புபடுகின்ற வீதிகளின் நிர்மாணம் 4 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் வாகனங்களின் போக்குவரத்தினை இயலக்கூடியவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பலதோப்பூர் - சேருவில பாலம் பிரதான வீதிக்கு நேரடியாக இணைத்து நிர்மாணிக்கப்பட்டதுடன் அத்தகைய வீதிகள் நீண்ட வாகனங்களின் வருதல் மற்றும் வெளியேறுதலிற்காக வீதியை பயன்படுத்தும் போது முழுமையாக பயன்படுத்தவேண்டியிருந்தது. இந்த பிரச்சனையானது முறைமையான திட்டத்தின் மீது பாலத்தின் நிர்மாணமின்மையால் உருவாக்கப்பட்டிருந்தது.

**4.3 பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**மேந்தலைகள் கட்டுப்பாடு மற்றும் மேந்தலைகள் மீளளிப்பு**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் 03 செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுகளிற்காக மேந்தலை செலவினங்களாக 3 ஆண்டுகளிற்கு மேலாக

செலவிடப்பட்ட ரூபா 3,590,402 தொகையினை அறவிடுவதற்கு 2013 திசெம்பர் 31 இலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

(ii) வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் 02 செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுகளிற்கு செலுத்தப்பட்ட 01 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவுள்ள ரூபா 4,633,609 தொகையான சம்பளங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) செயற்திட்ட வாகனங்களுக்காக பெறப்பட்ட ரூபா 1,708,405 தொகையான காப்புறுதிக் கட்டணத்தின் செலவு மீதி மேந்தலைகள் கட்டுப்பாடு மற்றும் மேந்தலைகள் மீளளிப்பு கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த கணக்கை தீர்ப்பனவு செய்வதற்கு 2013 திசெம்பர் 31 இலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கண்டிக்கப்பட்ட அல்லது குறைவாக பயன்படுத்திய இயந்திரங்கள்

(i) முப்பத்து ஒன்பது கண்டிக்கப்பட்ட அல்லது குறைவாக பயன்படுத்திய இயந்திரங்கள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்று பொறியியலாளரின் 14 அலுவலகங்களில் இருந்ததுடன் அத்தகைய சொத்துக்களின் பெறுமதி ரூபா 5,250,621 ஆகும். மேலும் கணக்காய்வுக்கு பெறுமதி சமர்ப்பிக்காத 55 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் 18 மாகாண அலுவலகங்களில் பயன்படுத்தப்பட்டிருந்தது. அத்தகைய சொத்துக்களை திருத்துவதற்கோ அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 இல் ஜனாதிபதி தொழிற்படையில் வழங்கப்பட்ட இயந்திரங்களில் ரூபா 349,193,473 பெறுமதியான பதின்மூன்று சில்லு பரப்பல் இயந்திரங்கள் எடுக்கப்பட்டதிலிருந்து பயனற்றதாகவிருந்ததுடன் அத்தகைய இயந்திரங்கள் உள்நாட்டு வீதிகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மோட்டார் வாகனங்கள்

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான ரூபா 86,330,062 பெறுமதியான நாற்பத்தி நான்கு மோட்டார் வாகனங்கள் ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த மோட்டார் வாகனங்கள் வெளி நிறுவனங்களினால் நிறுத்திவைக்கப்பட்டிருந்தபோதும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சட்டப்படி சொந்தமில்லாத காணிகள்

2009 யூன் 15 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 25,604,180 பெறுமதியான வெலிய ஹொடவிலுள்ள 1.5907 ஹெக்டேயர்

பரப்பளவுள்ள காணி 1990 இல் நகர அபிவிருத்தி சபையால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கொடுக்கவேண்டியிருந்தது. 2014 ஆகஸ்ட் 07 இலும் கூட அரிமை மாற்றப்படாமை அவதானிக்கப்பட்டதுடன் அதேநேரம் காணி 2009 இல் அதனுடைய தலைமை அலுவலகத்தை பேணுவதற்காக மஹநெகும வீதி நிர்மாணம் மற்றும் உபகரண கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது.எனினும் அதிகாரசபையால் இந்தக்கம்பனியிடமிருந்து ரொம்ப காலமாக வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பயன்படுத்தப்படாத மற்றும் மெதுவாக நகரும் இருப்புக்கள்

ரூபா 2,708,554 தொகையான பயன்படுத்தப்படாத மற்றும் மெதுவாக நகரும் இருப்புக்கள் ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையாகவிருந்தது.

## 4.5 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பதவியணி

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) அதிகாரசபையின் பதவியணியின் இணக்கக்கூற்றின் பிரகாரம், 05 பதவிகளில் 380 வெற்றிடங்களும் 05 ஏனைய பதவிகளில் 127 மிகைகளும் உள்ளதென வெளிப்பட்டது.

(iii) வீதி அபிவிருத்தி அதிகாசபையின் செயற்பாடுகளை செய்வதற்கு அவசியமாகவுள்ள தொழில்நுட்ப சேவையில் 45பதவிகள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் மற்றும் தொழில்நுட்ப சேவையில் 57 பதவிகளில் வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயலாற்றலை பாதகமாக பாதித்திருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நூற்றுப்பத்து ஊழியர்கள் உயர்கல்வி,துறைமுகங்கள் மற்றும் ஜனாதிபதி செயலகத்திற்கும் விடுவிக்கப்பட்டிருந்தது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் விடுவிக்கப்பட்ட அலுவலகர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 70,412,563 தொகையான சம்பளங்கள் மற்றும் படிகளை அந்த நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நடவடிக்கைகளுடன் தொடர்புபடாத 06 அரச நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஏழு ஊழியர்களிற்கு செலுத்தப்பட்ட ரூபா 4,575,841 தொகையான சம்பளங்கள் மற்றும்

படிகளில் ரூபா 934,657 தொகையை மீளளிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 கொள்வனவு பிரிவின் செயலாற்றல்

(i) கொள்வனவு பிரிவு முறையான மற்றும் ஆக்கபூர்வமான வழிகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்வனவு மேற்கொள்ளும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்டிருந்தது. ஆனால், கொள்வனவு பிரிவின் நோக்கங்கள் பல ஆண்டுகளிற்கு மேலாக படிப்படியாக குறைவடைந்திருந்தது.

(ii) பிரிவின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 37 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணி 14 ஆக இருந்தது. பணிப்பாளர் மற்றும் வழங்கல் உத்தியோகத்தர் பிரிவில் ஒரு உத்தியோகத்தர் மாத்திரமே உள்ளனர்.

(ii) ரூபா 23.8 மில்லியன் தொகையான காகிதாதிகளின் கொள்வனவு கொள்வனவு பிரிவால் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது அதேநேரம் ஏனைய கொள்வனவுகள் மீளாய்வாண்டின் போது ஏனைய பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 5. கணக்குப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2013 ஆம் ஆண்டிற்கான பாதீடு திருத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 06 இல் பணிப்பாளர் சபையினால் திருத்தப்பட்ட பாதீடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆகவே, பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபை தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வீதிப் பராமரிப்பும் சேவை நாடுநர் வேலைகளும்
(ஆ) நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்
(இ) தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தல்
(ஈ) பிராந்திய அலுவலகங்களின் முகாமைத்துவம்
(உ) பௌதீக மற்றும் மனித வளங்களின் பாவனை
(ஊ) ஒப்பந்த நிர்வாகம்
(எ) பொருளிருப்புக் கட்டுப்பாடு